NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 7 January 2022

# என்யுஎஸ் வளாகத்தில் தானாக ஓடிய வாகனங்கள்

சிங்கப்பூரின் எதிர்காலப் போக்குவரத்து எப்படியிருக்கும் என்பதை இப்போதே சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக மாணவர்கள் காட்டியுள்ளனர்.

ஓட்டுநர் இல்லாமல் தானாக ஓடும் ஸ்கூட்டர், கோல்ஃப் 'பகி' வாகனம் ஆகியவற்றை மாணவர்கள் ஓட்டிக் காட்டினர்.

பல்கலைக்கழக கெண்ட் ரிட்ஜ் வளாகத்தில் ஓட்டுநர் இல்லாமல் வாகனங்கள் தானாக ஓடின. இதில் ஏறி சவாரி செய்ய மாணவர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். ஒவ்வொரு 15 நிமிடத்துக்கு ஒரு முறை ஓடிய வாகனத்தில் மாணவர்கள் ஏறி அமர்ந்ததும் தானாக நகர்ந்து குறிப்பிட்ட இடத்தை நோக்கி வாகனங்கள் செல்கின்றன. எதிரே யாராவது வந்தாலும் நின்றுவிடுகின்றன.

கோல்ஃப் 'பகி' வாகனம், சக்கர நாற்காலி, ஸ்கூட்டர், கார் ஆகிய நான்கு வாகனங்கள் தானாக ஓட்டிக் காட்டப்பட்டன.

நான்கு வாகனங்களிலும் ஓட்டுநர் ஓட்டும் சக்கரம் இணைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக தொடுதிரைகள் அமைக்கப்பட்டிருந்தன. அது அக்கம்பக்க சூழலைக் கணக்கிட்டு விவரங்களைப் பதிவு செய்கிறது. பிரேக் விசையை யாரும் அழுத்தாமலே தானாக பிரேக் போட்டுக்கொள்கிறது.

தானாக ஓடும் வாகனங்களை 'ஸ்மார்ட்' என்று அழைக்கப்படும் சிங்கப்பூர்-மசாசூசட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் ஆய்வு, தொழில்நுட்ப மாணவர்கள் வடிவமைத்து உள்ளனர்.

வாகனங்கள் தானாக ஓடியதை இயந்திர மனிதர்களின் அணிவகுப்பு என்று என்யுஎஸ் இயந்திரவியல் பொறியியல் பிரிவின் பேராசிரியர் மார்சிலோ ஆங் தெரிவித்தார்.

தானாக ஓடும் வாகனங்கள், மனிதர்கள் ஓட்டும் வாகனங்களைவிட பாதுகாப்பாக இருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

"நான் ஓய்வுபெறும்போது எனது மகன் வந்து அழைத்துச் செல்லாமல் நண்பர் அல்லது நான் விரும்பிய இடத்துக்குச் செல்ல விரும்புகிறேன். ஓட்டுநரை அதிகம் நம்பியிராத வாகனமாக அது இருக்க வேண்டும்," என்று பேராசியர் மார்சிலோ ஆங் சொன்னார்.



என்யுஎஸ் பொறியியல் பிரிவு பேராசிரியர் மார்சிலோ ஆங், தானாக இயங்கும் வாகனத்தில் பயணம் செய்கிறார்.

**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.